**நாரம்மல பிரதேச சபை - 2021**

-------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

----------------------------

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

----------------------------------------------------

நாரம்மல பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று அத்திகதியில் முடிவடைந்த நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாரம்மல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

-----------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்**

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேசசபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக

இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(III) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்தரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமாக இருந்த ரூபா 5,631,162 பெறுமதியான 04 சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தமை காரணமாக நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதனத்திற்கு வருமானத்தினால் பங்களிப்புச் செய்யும் கணக்கு அத் தொகையினால் குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்தது. | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகிறேன். | சரியான கணக்கு வைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டுக்கான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 24,000,000 நிதிக் கூற்றுக்களில் பௌதிகத் திட்டமிடல் பாதைகள் காணி கட்டட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காட்டப்பட வேண்டியிருந்த போதும், பொது நிர்வாக நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | பொது நிர்வாகத்தின் வேறு வருமானங்களின் கீழ் காட்டுவது பொருத்தமானது என்பதை குறிப்பிடுகிறேன். | முத்திரைக் கட்டண வருமானமானது பௌதிகத் திட்டமிடல் பாதைகளின் கீழ் காட்டப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டுக்கான சம்பள மீள் நிரப்பல் வருமானம் ரூபா 57,703,255 வருமானச் செலவுக் கணக்கில் ரூபா 58,467,100 என குறிப்பிடப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 763,845 கூடுதலாகவும், மீளாய்வாண்டில் பெறப்பட வேண்டிய சம்பள மீள் நிரப்பல் ரூபா 4,571,643 ரூபா 4,336,598 என ரூபா 235,045 குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | வேறுபாட்டிற்கான காரணம் விதவைகள் அனாதைகள் மீள் நிரப்பல் நிதியாகும். | சரியான கணக்கு வைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் ரூபா 281,300 பெறுமதியான பிரச்சார விளம்பரக் கட்டண வருமானம் கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன் | சரியான கணக்கு வைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம். பிரிவு 132 | குறித்த சட்டத்தினுள் அடங்காத ஒரு விடயமாகிய ஓய்வுபெற்ற சபை | கௌரவ ஆளுனர் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் | சட்டத்தின் 132 ஆம் பிரிவிற்கமைவாக செலவுகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உறுப்பினர்களுக்கான பாராட்டு விழாவுக்காக ரூபா 450,080 தொகை செலவிடப்பட்டு 2021 பெப்ரவரி 09ஆம் திகதி சபையின் தீர்மாணத்தின் பிரகாரம் 78 நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டிருந்தன. | கொள்கிறேன் | மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2015 நவம்பர் 02 ஆம் திகதிய 2015/01ஆம் இலக்க வடமேல் மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | பிரதேச சபையொன்றின் தலைவருக்காக நடாத்தப்பட்ட புண்ணிய கருமம் ஒன்றிற்காக ரூபா 100,000 நன்கொடை பொதுக்கூட்ட தீர்மாணத்தின் அடிப்படையில் அமைச்சரின் அனுமதியின்றி வழங்கப்பட்டிருந்ததுடன், அவ்வாறான செலவினங்கள் தொடர்பாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்படாத அதேவேளை சபையின் அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியில் இத் தொகை வழங்கப்பட்டிருந்தது. | நிதி வழங்குவதற்காக கௌரவ ஆளுனர் அவர்களின் அனுமதி பெறப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரமாணங்களுக்கு அமைவாக செயற்படல் வேண்டும். |

**1.8 போதிய அதிகார பலத்தினால் உறுதி செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்தரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தம்பதெனிய ஆரம்பப் பாடசாலையின் புதிய வகுப்பறையை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,000,000 தொகை கட்டடப் பொருட்கள் கொள்வனவுக்காக வழங்கப்பட்டிருந்தது. பிரதேச சபைச் சட்டத்தின் 132 ஆம் பிரிவில் குறிப்பிடப்படாத மற்றும் 2021 வரவு செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்படாத பாடசாலை வகுப்பறை கட்டட நிர்மாணம் கல்விச் செலவுத் தலைப்பில் அன்றி சபை நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தம்பதெனிய ஆரம்பப் பாடசாலையின் அதிபர் அவர்களின் வேண்டுகோலின் அடிப்படையில் இப் பொருள் உதவி வழங்கப்பட்டது. இதற்காக கௌரவ ஆளுனர் அவர்களின் அனுமதி பெறப்பட்ருந்தது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் | கல்விச் செலவுத் தலைப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு செலவாக உள்ளதுடன், வரவு செலவில் உள்ளடக்கப்பட்டு சுற்றறிக்கை பிரமாணங்களுக்கு அமைவாக செலவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | சுகாதார செலவுத் தலைப்புடன் தொடர்பான ஒரு செயற்பாடாகிய தம்பதெனிய கொவிட் சிகிச்சை நிலையத்தின் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு | அவசர தேவையின் நிமித்தம் ஆளுனர் அவர்களின் வாய் மொழி மூல அறிவுறுத்தல் மற்றும் உள்ளுராட்சி ஆணையாளரின் | இது சுகாதார செலவுத் தலைப்புடன் தொடர்பான ஒரு செலவாக இருப்பதுடன், பிரதேச சபைக்கு உரித்தான செலவுகளை |

| | | |
|---|---|---|
| தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,640,000 தொகை ஆளுனர் அவர்களின் முன் அனுமதியின்றி செலவிடப்பட்டிருந்தது. | அறிவுறுத்தலின் பிரகாரம் தம்பதெனிய வைத்தியசாலையின் கொவிட் பிரிவின் அவசர சிகிச்சைப் பிரிவிற்கான அத்தியாவசிய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக நிதி வழங்கப்பட்டது. | இனங்கண்டு செலவு செய்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 23,636,609 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 18,040,622 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆந் திகதியன்று வியாபார நிலைய வாடகையாக ரூபா 249,106 தொகை மற்றும் விலைமனு குத்தகை வாடகையாக ரூபா 576,271 தொகை ஆகியன அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்ககை எடுப்பதாக அறியத்தருகிறேன். | நிலுவைத் தொகை உரிய காலத்தில் அறவிடப்பட வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடஹபொல மேரிலேன்ட் ஏலவிற்பனைக் காணி 04 ஆம் கட்டத்தின் கீழ் 3 ஏக்கர் 1 ரூட் 38 பர்சஸ் பரப்புள்ள பொதுக் காணியொன்றினை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இவ்வாறு சபைக்கு கிடைக்க வேண்டிய காணிகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்காததன் காரணமாக முறையற்ற கொடுக்கல் | 02 ஏக்கர் 03 ரூட் 10 பர்சஸ் பரப்புள்ள காணியொன்று 02 கட்டங்களின் கீழ் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். | சுற்றுநிரூப விதிமுறைகளுக்கமைவாக பொதுத் தேவைகளுக்காக காணிகள் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். |

வாங்கல்கள் இடம்பெறுவதற்கான சந்தர்ப்பம் காணப்படுவதாகவும் அவதானிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட காணியை துண்டு பிரித்து விற்பனை செய்யும் பொழுது அதற்கான துண்டாக்கல் திட்டத்திற்கான அனுமதி பெறப்படும்பொழுது காணப்பட்ட நிபந்தனைக்கமைவாக பாதை முறையாக காபட் இடப்பட்டு செப்பனிடப்படாதிருந்ததுடன், காண்கள் உரிய தரத்தின் அடிப்படையில் தொழில்நுட்ப அறிவுறுத்தலுக்கமைவாக நிர்மாணிக்கப்படாததன் காரணமாக காண்கள் உடைந்து மண் நிரம்பிக் காணப்படுகின்றன.

**3.2 கொள்வனவுகள்**

**3.2.1 வினியோகம் மற்றும் சேவைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காரியாலயக் கட்டடத்தை கணினிமயப்படுத்தல் மற்றும் பாதுகாப்புக் கமரா பொருத்துதல் ஆகிய சேவைகளை தனியார் நிறுவனம் ஒன்றின் மூலம் பெற்றுக்கொள்வதற்காக 2021 ஜூன் மாதம் 08ஆம் திகதி ரூபா 1,192,010 பெறுமதியான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. முன்கொடுப்பனவுக் காப்புறுதி இன்றி ரூபா 382,402 தொகை முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் படி இவ்வேலையானது ஒரு மாத காலத்தில் முடிக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டியிருந்த போதும், இரண்டாவது மாடியின் வேலைகள் முடிக்கப்படாததன் காரணமாக CCTV தொகுதியின் வேலைகள் தாமதமான போதும், முழு ஒப்பந்தப் பெறுமதியின் 80 வீதமாகிய ரூபா 1,034,661 தொகை 2021 ஒக்டோபர் 09 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தத்தின் 1,3,6 இலக்க நிபந்தனைகளை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. | கணினித் தொகுதி மற்றும் கமரா தொகுதிகளுடன் தொடர்பான பௌதிக பொருத்துகைகளை அடிப்படையாக வைத்து முடிக்கப்பட்டுள்ள வேலைகளின் படி சுமார் 80 வீதமான வேலைகள் முடிக்கப்பட்டுள்ளதுடன், கட்டடத்தின் நிர்மாண வேலைகளில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவே ஒப்பந்தத்தின் 1,3,6 இலக்க நிபந்தனைகளை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். | கொள்வனவு வழிகாட்டிக்கு அமைவாக வினியோகம் மற்றும் சேவைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபைக் கட்டடத்திற்கான திரைச் சீலை இடுவதற்காக கொள்வனவு வழிகாட்டிக் கோவை 3:2 மற்றும் 3:4 ஆகியவற்றுடன் இணக்கமின்றி நேரடி ஒப்பந்த முறையின் கீழ் முதியோர் கழகம் ஒன்றுடன் ரூபா 1,635,298 பெறுமதியான ஒப்பந்தம் | திட்டங்கள் கையளிக்கப்படுகையில் கழகங்களினால் முன்பு மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளைக் கருத்தில் கொள்ளும் பொழுது, இக் கழகமானது பாதை அபிவிருத்தித் | வினியோகம் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் பொழுது அதற்குத் தகுதியான விண்ணப்பதா |

கைச்சாத்திடப்பட்டிருந்தது.
வினியோகஸ்தர் ஒருவர் தெரிவு செய்யப்படாது இத் தேவைக்காக கழகம் ஒன்றினைத் தெரிவு செய்ததன் காரணமாக தகுதி வாய்ந்த ஆர்வமுள்ள பிரிவினருக்கு கொள்வனவு செயற்பாட்டில் கலந்துகொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கவில்லை.
முற்பணக் காப்புறுதி இன்றி ஒப்பந்தப் பெறுமதியில் 20 வீதம் அதாவது ரூபா 327,060 தொகை முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது.
இக் கழகத்தினால் பாதைகள் கொங்ரீட் இடல், இன்டர்லொக் கல் பதித்தல் ஆகிய செயற்பாடுகளே மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இவ்வாறான ஒரு கழகத்திடம் திரைச்சேலை இடல் போன்றதொரு வேலையை ஒப்படைத்தமை பொருத்தமானதா என்ற கேள்வி கணக்காய்வின் போது எழுந்தது.
திட்டங்களை மாத்திரமே மேற்கொண்டிருந்தது.
எனினும் இக் கழகத்திடம் திரைச்சேலை வடிவமைக்கும் திறன் காணப்படுவதாக அக் கழகத்தினால் கௌரவ தலைவர் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.
அந்த நம்பிக்கையின் அடிப்படையில் தலைவர் அவர்களால் அவர்களிடம் இத் திட்டம் கையளிக்கப்பட்டிருந்தது.